**உக்குவெல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018ஆகஸ்ட் 27 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உக்குவெல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் முற்பண பதிவேட்டின் பிரகாரம் மீதி காணப்படாத எனினும் பேரேட்டுக் கணக்கின் படி காணப்பட்ட ரூபா. 123,090 செலவு மீதி திரண்ட நிதிக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இயந்திர உபகரணங்கள் கணக்கில் காணப்பட்ட ரூபா. 26,308,914 தொகையில் ரூபா. 20,977,591 நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வின் பிரகாரம் மீதியை சரி செய்தல் எனக் குறிப்பிட்டு நாட்குறிப்புப் பதிவு 35 இன் மூலம் பேரேட்டுக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமாகவிருந்த ரூபா. 1,600,000 பெறுமதியான பாதை பதனிடல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கிலும் மோட்டார் வாகன மற்றும் இழுவண்டிக் கணக்கிலும் பதியப்பட்டிருந்தமையால் நிலையான சொத்து மீதி அப் பெறுமதியினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா. 392,998 ஆக இருந்த நிர்மாணச் செலவினம் மீண்டெழும் செலவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய மூலதனப் மானியங்கள் ரூபா. 1,209,679 குறைவாகவும் மூலதனச் செலவுகள் ரூபா. 5,302,318 கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நோக்கில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் 2016 ஆம் ஆண்டினுள் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 700,000 இற்கான 2 நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு 2017ஆம் வருடத்தினுள்ளும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த அதேவேளை அத்தொகை கடன் கொடுத்தோர் என கணக்குகளில் காட்டப்பட்டதனால் கடன் கொடுத்தோர் மீதி ரூபா. 700,000 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா. 484,027 ஆன நிலையான வைப்பிற்கான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் ஜனவரி தொடக்கம் ஜுன் வரை முத்திரைக் கட்டணம் ரூபா. 8,100,700 ஆகவிருந்த போதும் ஜுலை தொடக்கம் திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கான முத்திரைக் கட்டண வருமான நிதிஏற்பாட்டின் போது ரூபா. 24,302,310 என கணக்குகளில் மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 145,009 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்கப்பெற வேண்டிய நீதிமன்ற அபராத மேலதிக ஒதுக்கீடான ரூபா. 92,477 சீராக்கத்திற்குப் பதிலாக ரூபா. 367,227 திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா. 274,750 கூடுதலாக திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா. 107,335 பெறுமதியான ஆயுர்வேத இருப்பு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கழிவு மத்திய நிலையத்தில் சேவையாற்றும் இருவரின் மீளாய்வாண்டிற்குரிய நாளாந்தச் சம்பளமாகிய ரூபா. 569,000 சம்பளச் செலவின் கீழ் கொண்டு செல்லப்படாது போக்குவரத்து தொடர்புகள் மற்றும் முக்கிய மற்றும் வேறு செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க்) 2016 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் அறிக்கையின் 2.2.1 பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 99,206,134 ஆன 7 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் அவைகளுக்கான துணைப்பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டதுடன், ரூபா 23,167,353 ஆன வித்தியாசம் நிலவியது.

**1.3.3 பெற வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 6 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,862,060 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட காலம் தீர்க்கப்படாத ரூபா 175,676 ஆன மீதியொன்று உள்ளடங்கியுள்ளது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 8 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,322,334 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தீர்க்கப்படாமல் காணப்படும் ரூபா 2,061,429 மீதிகளும் அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 53,476,859 ஆன 4 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| (அ) 1893 இன் 9 ஆம் இலக்க மாடுகளைக் கொல்லும் கட்டளைச் சட்டம் | | |
| i. 6 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற மாடுகள் கொல்லும் இடத்திற்காக, அனுமதிப்பத்திரமொன்று வழங்கும் போது சட்டத்தில் குறித்த |

| | | |
|---|---|---|
| | | மாதிரியின் பிரகாரம் இரண்டு பிணையாளிகள் வெளிப்பயாகவும் உறுதிப்படுத்தப்பட்ட வகையிலான பிணை உறுதியொன்று தயாரித்து வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 10 ஆம் பிரிவு | - | மாடுகள் கொல்லுமிடத்தில் ஒவ்வொரு மாதத்திலும் கொல்லப்பட்ட சகல மாடுகளினதும் விபரங்கள் சபையின் செயலாளரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| i. 177 ஆம் விதி | 216,000 | கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் கழிவுப் பிரதேசத்தில் சேவைக்காக எஸ்கவேட்டர் இயந்திரமொன்று வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கிடைக்கப் பெறுகின்ற விலைகளுக்காக கேள்விப் பெட்டியொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| ii. 178 (8) ஆம் விதி | - | கேள்வி தொடர்பான உப பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) சுற்றறிக்கை மற்றும் ஏனைய கடிதங்கள் | | |
| (i) 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் 5 ஆம் பிரிவு | | பொது வியாபார 48 கடைகள் தொடர்பாக புதிய மதிப்பீடொன்று இல்லாமல் 2010 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட கடை வாடகை வருமானம் மீளாய்வாண்டிற்காகவும் அறவிடப்பட்டிருந்தது. |
| (ii) 1988 மே 17 திகதிய இலக்கம் 1988/22 கொண்ட உள்ளுராட்சி திணைக்களச் சுற்றறிக்கை | | 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி அறவிடப்படும் பிரதேசங்களில் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபை 2007 ஆண்டின் மதிப்பட்டை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 37,328,696 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,232,422 ஆக இருந்தது.

மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவுகளை விஞ்சிய வருமானம் கூடிய பெறுமதியை எடுப்பதற்காக திசெம்பர் காலப்பகுதிக்குரிய பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 24,302,310 மிகை மதிப்பீடு தாக்கமளித்திருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 812,345 | 868,738 | 514,779 | 548,721 | 810,000 | 876,867 | 112,448 | 786,657 |
| (ii) | வாடகை | 2,150,000 | 2,778,668 | 2,731,435 | 48,809 | 2,200,000 | 2,574,179 | 2,535,538 | 38,641 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,000,000 | 1,393,430 | 1,393,430 | - | 1,400,000 | 1,884,785 | 1,884,785 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,500,000 | 4,467,671 | 3,067,730 | 1,736,577 | 4,500,000 | 4,410,911 | 2,936,647 | 1,710,835 |

### 2.2.2 (அ) வீதவரி

(i) மீளாயவாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 548,721 ஆக இருந்ததுடன், அம்மீதியில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 128,312 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) சபை 2014/2015 ஆம் ஆண்டின் போது புதிய வீதவரி மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அதில் காணப்பட்ட குபைாடுகளை சீராக்கப்படாததன் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்காக 2007 ஆம் ஆண்டில் காணப்பட்ட மதிப்பீட்டின் பேரில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

(iii) பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள் தற்போது செயற்படாதிந்ததுடன் மீதியை பெற்றுக்கொள்ளும் போது வீதவரிப் பதிவேட்டின் பிரகாரம் பெற்றுக்கொள்வதற்கு தகவல்கள் உள்ளடக்குவதற்கு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 31,333 ஆனதுடன், இவ் மீதி 7 வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) கழிவுப்பொருட் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கழிவுப்பொருட் கட்டணங்கள் மீதி ரூபா 13,531 ஆனதுடன், அம் மீதி 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 1,736,577 ஆக இருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 495,250 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 15,336,543 உம் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

அதிகார பிரதேசத்தின் 36 நிறுத்துமிடங்களில் 319 முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதாக இனங்காணப்பட்டு அதற்காக நிறுத்திவைத்தல் கட்டணங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 46,800 அறவிடப்பட வேண்டிய போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126(vii) (ஏ) பிரகாரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

சபைக்கு சொந்தமான சிறந்த நிலைமையொன்று இருக்கையில் பாதீட்டின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு உத்தேசித்திருந்த அபிவிருத்தி முன்மொழிவுகள் நிறைவேற்றப்படாமல் மீளாய்வாண்டில் 2 நிலையான வைப்புக்களில் ரூபா 13,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது.

#### (இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை

மீளாய்வாண்டில் ஒரு செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,993,080 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்ட கொள்கையின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்தை பூர்த்திசெய்தல் , தென்ன பொது நூலகத்தை அண்மித்த சிறுவர் பூங்காவொன்றை நிர்மாணித்தல் மற்றும் எல்கடுவ சுற்றாடல் பூங்காவொன்றாக அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதீட்டு நிதிஏற்பாட்டின் கீழ் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்த ரூபா 3,071,580 பெறுமதியான 3 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிஏற்பாட்டு தொகையை விஞ்சி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக அங்கீகாரம் கிடைக்காமை காரணமாக ரூபா 239,167 பெறுமதியான 2 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேர்கின்ற 4 முதல் 4 ½ தொன் கழிவில் 1 தொன் உக்காத கழிவு மீள் சுழற்சிக்காக பயன்படுத்தி 1 தொன் கொம்போஸ்ட் உர உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதமுள்ள 2 ½ தொன் உக்காத கழிவு பாதகமான முறையில் கழிவு முகாமைத்துவ கட்டிடத்திற்கு அருகில் ஒன்றுசேர்க்கப்படுவது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினுள் 3115 கிலோ உரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா. 58,440 இலாபம் பெறப்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

(i) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை முறையாக அறிந்திராமையால் அந்நோக்கங்களுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத்திட்டம் 2018 மே 30 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2018 யூன் 11 ஆந் திகதி வரையில் வறுமையை ஒழிக்கும் நோக்கின் கீழ் இலக்கு இனங்காணப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே போதியளவு பதவியணியினர் இல்லாமை மற்றும் வளங்கள் குறைவாக இருந்தமை காரணமாக அந்த இலக்குகளை அடைந்துகொள்வது சிக்கலொன்றாக இருந்தது.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருகை மற்றும் வெளியேறல் பதிவேடொன்றில் பதிவுசெய்யப்படாமல் விடுமுறை தின வேலையை நிறைவேற்றுவதற்காக சபையின் செயலாளருக்கு ரூபா 97,639 விடுமுறை தினக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 78(1) பிரிவின் பிரகாரம் சபையானது தனது அதிகாரப் பிரதேசத்தில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பொது நிர்வாக அதிகார சபையாக செயற்பட வேண்டியிருந்த போதும் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் சபையினால் பராமரிக்கப்படுகின்ற 4 நீர் முன்மொழிவுத் திட்டங்களில் நீரின் தரப் பரிசோதனை செய்யப்படாதிருந்ததுடன் பொது அமைப்புகளினூடாக பராமரிக்கப்படுகின்ற 16 நீர் செயற்திட்டங்களில் 11 திட்டங்களின் நீர் தர பரிசோதனையின் பிரகாரம் நீர் குடிப்பதற்கு பொருத்தமான தரத்தில் இருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் பிணை வைப்புக் கணக்கின் மீதியாகிய ரூபா. 143,242 இல் ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான ஊழியர் பிணை வைப்பு ரூபா. 50,660 முதலீட்டுக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு சாசேட்டிற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த போதும், குறித்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருமானக் கடன்பட்டோரில் 2011 ஆம் வருடத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா. 560,776 ஆதனக் கடன் வட்டி காணப்பட்டதுடன், சபை அப்பெறுமதியை இனங்கண்டு சீராக்குவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான 97 காணிகளில் 23 காணிகளுக்காக மாத்திரம் உறுதிப்பத்திரம் மற்றும் கையளிப்பு கட்டளைகள் பெறப்பட்டிருந்தன.

(ஊ) 2013 தொடக்கம் 2015 வருடங்களுடன் தொடர்பான ரூபா. 317,217 பெறுமதியான 9 நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக குறித்த கோவைகளைப் பரீசித்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 9 நிர்மாணங்கள் தொடர்பிலான வீதிப் பதாதைகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 36,000 இற்கான வீதி பதாதைகள் தயாரிக்கப்படாமையினால் கடன்கொடுத்தோர் எனப் பதியப்பட்டிருந்ததுடன் அதனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் தயாரிக்கப்பட வேண்டிய பிரதேச சபை அறிக்கைகளில் பிரதேச சபை 7 மற்றும் 19 அறிக்கைகளை சபை தயாரித்திருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) பிரதேச சபைக்கக அங்கீகரிக்கப்பட்ட 9 பதவிகளில் 22 வெற்றிடங்கள் நீண்டகாலமாக பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை சபையினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய பொது மக்கள் சேவைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது நியமனம் பெற்ற 6 ஊழியர்களின் கல்விச் சான்றிதழ் 2018 மார்ச் வரையிலும் உறுதிப்படுத்தப்படுத்தப்படாதிருந்தமையால் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் வெற்றிடமாக காணப்பட்ட நூலக உதவியாளர் பதவி 1 மற்றும் 2 அலுவலக உதவியாளர் பதவிகள் என்பவற்றை ஆட்சேர்ப்பதற்காக 326 விண்ணப்பதாரிகளுக்கு இடையே 3 பேர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 6 நாட்கள் 5 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக உபசரிப்புச் செலவினமாக ரூபா 19,861 செவிடபபட்டிருந்த போதிலும் எவ்வித காரணமுமின்றி அந்த ஆட்சேர்ப்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

மீளாய்வாண்டிற்காக முறையான வாடகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடாது சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில் 17 ஆம் இலக்க இறைச்சிக்கடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இறைச்சிக் கடைக்காக இறைச்சி விநியோகிக்கும் நபரின் அனுமதிக்கப்பட்ட மாடு கொல்லும் இடத்தின் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்று சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று மாட்டிறைச்சிக் கடையின் குத்தகையாளர் குறித்த இறைச்சியை கலேவெலையிலுள்ள மாடு கொல்லும் இடமொன்றிலிருந்து பெற்றுக் கொள்வதாக எழுத்து மூலமாகக் குறிப்பிட்டிருந்த போதும் அம் மாடு கொல்லும் இடத்திற்காக கலேவெலை பிரதேச சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 282,500 பெறுமதியான சிமெந்து கலவை இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பாதுகாப்பற்ற முறையில் சபைக்குச் சொந்தமான வாகனங்களை நிறுத்தி வைப்பதன் காரணமாக JCB இயந்திரத்தின் வலது பக்கக் கதவின் கண்ணாடி உடைந்திருந்ததுடன் குறித்த கண்ணாடியின் பெறுமதி ரூபா. 80,000 என வாகனத்தின் முகவர் நிலையம் தெரிவித்திருந்தது. இவ்விபத்து தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் குறித்த நட்டம் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பெறுகை செயற்பாடு

### 3.7.1 பெறுகை திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று, சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், 2017 சனவரி முதல் நவம்பர் வரை ரூபா 4,598,481 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.7.2 பெறுகைகள் மற்றும் சேவைகள்

**(அ) கெப் வாகனமொன்றினை திருத்தம் செய்தல்**

கெப் வாகனமொன்றினை திருத்தம் செய்வதற்காக 2017 மார்ச் 07 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 322,691 செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வாகனத்தின் என்ஜினை திருத்தம் செய்வதற்கு பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக மோட்டார் வாகன பரீட்சகர் ஒருவரது அல்லது இயந்திரப் பொறியியலாளர் ஒருவரது பரிந்துரைகள் பெறப்படாது, என்ஜின் திருத்தம் என மாத்திரம் குறிப்பிட்டு மூன்று நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் பெறப்பட்டிருந்தன.

(ii) கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2017 ஜனவரி 06 ஆம் திகதி திறக்கப்பட்டதாக திகதி முத்திரை இடப்பட்டு பெறுகைக் குழு கையொப்பமிட்டிருந்த போதும் அதற்கு முற்பட்ட ஒரு திகதியொன்றான 2016 திசெம்பர் 30 ஆம் திகதிய 819 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் குறித்த விலைமனுதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(iii) திருத்த வேலைகளை மேற்கொண்ட நிறுவனம் 2017 மார்ச் 10 ஆம் திகதி சமர்ப்பித்த ரூபா. 322,691 இற்கான இறுதி விலைப்பட்டியலுக்காக அதற்கு முன்னைய தினமாகிய 2017 மார்ச் 09 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் திருத்தம் முறையாக மேற்கொள்ளப்பட்டதற்கான இயந்திரப் பொறியியலாளர் ஒருவரின் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) குருலவெல தெற்கு சுகந்த சமூக நல அமைப்பின் நீர் முன்மொழிவுத் திட்டத்திற்கான நீர் பம்பி கொள்வனவு**

மேற்குறித்த நீர்செயற்திட்டத்திற்காக ரூபா 1,264,175 செலவிடப்பட்டு 2 நீர் பம்பிகளை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் பொருத்தி 3 மாதங்கள் அளவிலான குறுகிய காலப்பகுதியில் ஒரு நீர் பம்பி இயங்காதிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 17 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கிடையே விலகல் 52 சதவீதம் முதல் 57415 இடைப்பட்ட விலகல்கள் நிலவியது.

(ஆ) 13 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,185,000 ஆன ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 24 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 42 சதவீதம் முதல் 98 சதவீதத்திற்கு இடைப்பட்ட விலகல்கள் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) கணக்கீட்டுப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் நாளதுவரையாக பேணப்படாமை<br>(ii) பொதுப் பேரேடு முறையாக பேணப்படாமை<br>(iii) பிரதேச சபை அறிக்கை முறையாக பேணப்படாமை. |
| (ஆ) | பதவியணியினர் முகாமைத்துவம். | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை<br>(ii) வருமான இலக்கை பூர்த்தி செய்யாமை. |